மேற்காசிய பிரச்னையில் அரசியல் செய்கிறது காங்கிரஸ்

பிரதமர் மோடி கடும் சாடல்

கேரள மாநிலம், கொச்சியில் புதன்கிழமை நடைபெற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தொடக்க விழாவில் பிரதமர் மோடிக்கு நினைவுப் பரிசு வழங்கிய மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி. உடன், ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர், மத்திய அமைச்சர் ஜார்ஜ் குரியன் உள்ளிட்டோர்.

கொச்சி, மார்ச் 11: மேற்காசிய பிரச்னையை முன்வைத்து, காங்கிரஸ் அரசியல் செய்கிறது; வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியர்களுக்கு இடர்ப்பாடுகளை உருவாக்கக் கூடிய கருத்துகளை அக்கட்சி உள்நோக்கத்துடன் தெரிவிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக சாடினார்.

வளைகுடா பிராந்தியத்தில் சிக்கியுள்ள இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளையும் உறுதி செய்ய மத்திய அரசு தீவிரமாக செயலாற்றி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே 10 நாள்களுக்கும் மேலாக போர் நீடிப்பதால், மேற்காசிய பிராந்தியத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. போரின் தாக்கம் இந்தியாவிலும் எதிரொலித்துள்ள நிலையில், மத்திய அரசை காங்கிரஸ் தொடர்ந்து விமர்சித்து வருகிறது.

'பிரதமர் மோடியின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் இந்தியாவின் சர்வதேச நிலைப்பாடு பலவீனமாகிவிட்டது; ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி படுகொலை, இலங்கை அருகே அமெரிக்க நீர்மூழ்கி தாக்குதலில் ஈரான் போர்க் கப்பல் மூழ்கடிப்பு போன்ற சம்பவங்களுக்கு பிரதமர் மோடி எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை; மேற்காசிய போரால் எழுந்துள்ள எரிசக்தி பிரச்னையை எதிர்கொள்வதில் மத்திய அரசு தோல்வியடைந்துவிட்டது' என்பது காங்கிரஸின் குற்றச்சாட்டுகளாகும்.

பிரதமர் மோடி பதிலடி: இந்தச் சூழலில், பேரவைத் தேர்தலை எதிர்கொண்டுள்ள கேரளத்துக்கு புதன்கிழமை ஒருநாள் பயணமாக வருகை தந்த பிரதமர் மோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

கொச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டுபேசியதாவது: இன்றைய இந்தியா, தனது குடிமக்களை எங்கும் தவிக்க விடுவதில்லை. வளைகுடா பிராந்தியத்தில் சிக்கியுள்ள இந்தியர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உறுதி செய்ய மத்திய அரசு தீவிரமாக செயலாற்றி வருகிறது. வளைகுடா நாடுகளும் அங்கு பணியாற்றும் இந்தியர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டு செயல்படுகின்றன.

வதந்தி பரப்பும் காங்கிரஸ்: அதேநேரம், இந்தப் பிரச்னையில் காங்கிரஸ் அரசியல் செய்கிறது. வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களுக்கு இடர்ப்பாடுகளை உருவாக்கக்கூடிய, பொறுப்பற்ற கருத்துகளை உள்நோக்கத்துடன் தெரிவிக்கிறது.

காங்கிரஸ்-இடதுசாரிகளின் ஆட்சியில் வெளிநாடுகளை மேலும் மேலும் சார்ந்திருக்கும் வகையில் இந்தியாவை மாற்றினர்.

இப்போது மேற்காசிய போரை முன்வைத்து, நாட்டில் அச்சத்தைப் பரப்புகின்றனர். அவர்கள் பரப்பும் வதந்திகள் குறித்து நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

எல்டிஎஃப், யுடிஎஃப் வேண்டாம்: கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணியும் (எல்டிஎஃப்), காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் (யுடிஎஃப்) மாறி மாறி ஆட்சி செய்யும் முறை மாறினால்தான், இந்த மாநிலம் பலனடையும். 'மோடியின் உத்தரவாதங்களுடன்' கேரளத்துக்கு சேவையாற்ற தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ராகுல் மீது விமர்சனம்: காங்கிரஸின் இளவரசருக்கு (ராகுல் காந்தி) நாட்டில் நிகழ்ந்துவரும் வளர்ச்சி குறித்து எதுவும் தெரியாது.

கேரளம் உள்பட இந்திய இளைஞர்களும் நிறுவனங்களும் ட்ரோன் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. கேரளத்தை செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மற்றும் எதிர்கால தொழில்நுட்ப மையமாக உருவாக்க விரும்புகிறது பாஜக என்றார் பிரதமர் மோடி.

கேரளம்-பிரதமர் பெருமிதம்: 'கேரளா' என்ற பெயரை மலையாள உச்சரிப்புக்கு ஏற்ப கேரளம் என மாற்றும் மாநில அரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியது. இதைச் சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, அனைத்து மலையாள சகோதர-சகோதரிகளுக்கும் மகிழ்ச்சியான தருணமிது என்று பெருமிதம் தெரிவித்தார்.

கொச்சியில் மீனவ சமுதாய அமைப்பான அகில கேரள தீவரா சபையின் பொன்விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், கடலில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மீன்பிடிப் படகுகளில் 4,500-க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள் அடிப்படையிலான டிரான்ஸ்பாண்டர்களை நிறுவுதல் உள்பட மீனவர்களின் நலனுக்கான மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளையும் பட்டியலிட்டார்.

கேரளத்தில் ரூ.10,000 கோடி திட்டங்கள் தொடக்கம்-அடிக்கல்

முதல்வர், மாநில அமைச்சர்கள் புறக்கணிப்பு

கொச்சியில் ரூ.10,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களின் தொடக்கம் மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

கொச்சி பாரத் பெட்ரோலிய நிறுவன வளாகத்தில் ரூ.5,500 கோடி மதிப்பீட்டில் பாலிபுரோபைலின் ஆலைக்கு அடிக்கல் நாட்டிய அவர், ரூ.2,000 கோடி செலவில் நிறைவேற்றப்பட்ட இரு முக்கிய நெடுஞ்சாலைகள் மற்றும் ரூ.142 கோடி மதிப்பிலான ரயில்வே திட்டங்களையும் தொடங்கிவைத்தார்.

பின்னர் பேசிய பிரதமர், 'இந்தியா இப்போது மாபெரும் உற்பத்தி மையமாக உருவெடுத்து வருகிறது. ஏ.ஐ. மற்றும் செமிகண்டக்டர் துறைகளில் நாடு வேகமாக முன்னேறுகிறது.

இத்தகைய செயல்பாடுகளுக்கு அதிக எரிசக்தி நுகர்வு அவசியம். எனவே, பசுமை மற்றும் தூய எரிசக்திக்கான தேவையும் உயர்ந்து வருகிறது. நவீன உள்கட்டமைப்புகளில் இந்தியாவின் அதிக முதலீடுகள் ஒட்டுமொத்த உலகின் பாராட்டையும் பெற்றுள்ளன' என்றார்.

முதல்வர், மாநில அமைச்சர்கள் புறக்கணிப்பு: பிரதமரின் அதிகாரபூர்வ நிகழ்ச்சியில் பங்கேற்க முதல்வர் பினராயி விஜயன், மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் எம்.பி.ராஜேஷ், மின்சார துறை கே.கிருஷ்ணன்குட்டி ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதேநேரம், மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் பி.ஏ.முகமது ரியாஸ் அழைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில், முதல்வரும், பிற அமைச்சர்களும் பிரதமரின் நிகழ்ச்சியில் பங்கேற்காமல் புறக்கணித்துவிட்டனர்.

'பிரதமர் நிகழ்ச்சியில் அமைச்சர் பி.ஏ.முகமது ரியாஸ் தவிர்க்கப்பட்டது அதிர்ச்சியளிக்கிறது; இது அரசியல் உள்நோக்கம் கொண்டது.

கேரள மக்களின் வியர்வை மற்றும் பணத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை, தனது குறுகிய அரசியலுக்குப் பயன்படுத்துகிறது பாஜக' என்று மாநில பொதுக் கல்வித் துறை அமைச்சர் வி.சிவன்குட்டி விமர்சித்தார்.

மேற்காசிய போர்: பாரசீக வளைகுடாவில் சிக்கியுள்ள 28 இந்திய கப்பல்கள்

மத்திய அரசு தகவல்

புது தில்லி, மார்ச் 11: மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பாரசீக வளைகுடாவில் 778 மாலுமிகளுடன் 28 இந்திய கப்பல்கள் சிக்கியுள்ளதாக மத்திய அரசுத் தரப்பில் புதன்கிழமை தெரிவிக்கப்பட்டது.

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக பாரசீக வளைகுடாவில் முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடமான ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், இந்தியாவிலிருந்து பல்வேறு நாடுகளுக்குப் புறப்பட்ட சரக்கு கப்பல்கள் பாதி வழியில் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், கப்பல் நிறுவனங்களும், ஏற்றுமதியாளர்களும் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணமளிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தக் கப்பல் போக்குவரத்து பாதிப்பு குறித்து தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழித் தடங்கள் துறை மத்திய அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் ராஜேஷ் குமார் சின்ஹா கூறியதாவது:

போர் நிலவரம் காரணமாக பாரசீக வளைகுடாவில் இதுவரை 778 மாலுமிகளுடன் கூடிய 28 இந்திய கப்பல்கள் நடுவழியில் சிக்கியுள்ளன.

இவற்றில், 677 மாலுமிகளுடன் கூடிய 24 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையின் மேற்குப் பகுதியிலும், 101 மாலுமிகளுடன் கூடிய 4 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையின் கிழக்குப் பகுதியிலும் நிற்கின்றன.

இந்தக் கப்பல்களின் பாதுகாப்பு குறித்து அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மாலுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கப்பல் மேலாளர்கள், நியமன முகவர்கள், உள்ளிட்டோர் இந்திய தூதரகங்களுடனும் உள்ளூர் அதிகாரிகளுடனும் தொடர்ந்து ஆலோசனை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அனைத்து இந்திய கப்பல்களும், மாலுமிகளும் விரிவான பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், கப்பல் போக்குவரத்து குறித்த தகவல் பதிவை தீவிரமாகக் கடைப்பிடிக்கவும், குறிப்பாக கப்பலின் நிகழ்நேர விவரங்களைச் சமர்ப்பிக்கவும் கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

கப்பல் போக்குவரத்தைக் கண்காணிக்கவும், உதவிகளை வழங்கவும் மத்திய அமைச்சகம் மற்றும் கப்பல் போக்குவரத்து இயக்குநரகத்தில் பிரத்யேக கட்டுப்பாட்டு அறைகளும் செயல்பட்டு வருகின்றன.

கப்பல்களின் உரிமையாளர்கள், மாலுமிகள் சங்கங்களுடனும் கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் தொடர்பில் இருந்து வருகிறது. சிக்கல்களை எதிர்கொண்டுள்ள கப்பல்கள் மற்றும் மாலுமிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க துறைமுகங்களுக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றார்.

சத்தீஸ்கரில் 108 நக்ஸல்கள் சரண்: ரூ.3.60 கோடி, ஒரு கிலோ தங்கம் பறிமுதல்

ஜக்தால்பூர், மார்ச் 11: நாட்டில் நக்ஸல் தீவிரவாதத்தை முழுமையாக ஒழிக்க வரும் 31-ஆம் தேதியை கெடுவாக மத்திய அரசு நிர்ணயித்துள்ள நிலையில், சத்தீஸ்கர் மாநிலம், பஸ்தர் மாவட்டத்தில் 108 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு போலீஸில் புதன்கிழமை சரணடைந்தனர்.

இவர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், மாவோயிஸ்டுகளின் மறைவிடத்திலிருந்து ரூ. 3.60 கோடி ரொக்கம், ரூ 1.64 கோடி மதிப்பிலான ஒரு கிலோ தங்கம், ஏராளமான ஆயுதங்களை போலீஸார் கைப்பற்றினர்.

இதுகுறித்து பஸ்தர் மண்டல காவல் துறை ஐஜி சுந்தரராஜ் பட்டிலிங்கம் கூறியதாவது: மாவோயிஸ்டுகளின் தண்டகாரண்ய சிறப்பு மண்டலக் குழுவைச் சேர்ந்த 108 நக்ஸல் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு போலீஸில் புதன்கிழமை சரணடைந்தனர். இவர்களின் தலைக்கு ரூ. 3.05 கோடி பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், அவர்களின் மறைவிடங்களில் போலீஸார் மேற்கொண்ட சோதனையில் ஏகே-47 துப்பாக்கி, இன்சாஸ், எல்எல்ஆர் கைத்துப்பாக்கிகள், இலகுரக இயந்திர துப்பாக்கிகள் என மொத்தம் 101 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதோடு, ரூ. 3.60 கோடி ரொக்கம், ரூ 1.64 கோடி மதிப்பிலான ஒரு கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டன. ஒரே பகுதியில் இவ்வளவு ஆயுதங்கள், பணம், தங்கம் கைப்பற்றப்படுவது நாட்டின் நக்ஸல் எதிர்ப்பு நடவடிக்கை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும் என்றார்.

சத்தீஸ்கரில் கடந்த 26 மாதங்களில் 2,714 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர். பஸ்தர் மண்டலத்தில் மட்டும் கடந்த 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிமுதல் 2026 மார்ச் 9-ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் 2,625 மாவோயிஸ்டுகள் சரணடைந்துள்ளனர்.

தெலங்கானா: மேலும் 2 பிஆர்எஸ் எம்எல்ஏக்களை தகுதிநீக்கம் செய்யக் கோரும் மனு நிராகரிப்பு

ஹைதராபாத், மார்ச் 11: தெலங்கானாவில் மேலும் 2 பாரத ராஷ்டிர சமிதி (பிஆர்எஸ்) கட்சி எம்எல்ஏக்களை தகுதிநீக்கம் செய்யக் கோரி அக்கட்சி அளித்த மனுவை சட்டப்பேரவைத் தலைவர் பிரசாத் குமார் நிராகரித்தார்.

தெலங்கானாவில் 2023-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று காங்கிரஸ் ஆட்சியமைத்தது. இந்தத் தேர்தலின் போது பிஆர்எஸ் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வென்ற நாகேந்தர், ஸ்ரீஹரி உள்ளிட்ட 10 எம்எல்ஏக்கள், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தனர். இதையடுத்து, கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் 10 பேரையும் தகுதிநீக்கம் செய்யக் கோரி சட்டப்பேரவைத் தலைவரிடம் பிஆர்எஸ் கட்சி மனு அளித்திருந்தது. இதேபோல், நாகேந்தரை தகுதிநீக்கம் செய்யக் கோரி பாஜகவும் மனு அளித்திருந்தது.

இதில் ஏற்கெனவே 8 எம்எல்ஏக்களை தகுதிநீக்கம் செய்ய முடியாது என பேரவைத் தலைவர் பிரசாத் குமார் நிராகரித்துவிட்டார். இதையடுத்து புதன்கிழமை மேலும் 2 எம்எல்ஏக்களை தகுதிநீக்கம் செய்யக்கோரும் மனுவையும் அவர் நிராகரித்தார். இதன்மூலம் 10 பிஆர்எஸ் எம்எல்ஏக்களை தகுதிநீக்கக் கோரும் விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது. முன்னதாக, பிஆர்எஸ் கட்சியில் இருந்து விலகிய நாகேந்தர் 2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டார். ஆனால், தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். ஸ்ரீஹரியின் மகள் காவ்யா, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு மக்களவை எம்.பி. பதவியை வகிக்கிறார்.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

பேங்க் ஆப் பரோடா, பிராந்திய அலுவலகம், பெங்களூர் தெற்கு
4வது தளம், விஜயா டவர், 41/2, M.G.ரோடு, பெங்களூர் – 560 001,
போன் எண் : 080–25011710, மின்னஞ்சல் : recovery.blrsouth@bankofbaroda.bank.in

இங்கே ஸ்கேன் செய்யவும்
விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரங்களுக்கு

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்கள்/ உத்தரவாதம் அளித்தவர்கள் மற்றும் அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	அ. கிளை பெயர் ஆ. கணக்கு எண் இ. மொத்த நிலுவை	மின் ஏலத் தேதி மற்றும் நேரம்	அ. குறைந்தபட்ச விலை ஆ. முன் வைப்புத் தொகை இ. ஏல உயர்வுத் தொகை ஈ. சுவாதீன வகை	சொத்தினைப் பார்வையிடும் தேதி (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியுடன்)
1.	M/s.ஸ்ரீ ராம் கிரானைட், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : ஷிவ் ராம் மற்றும் ராஜூ தேவி, வசிப்பிட முகவரி : சர்வே எண்.481/C3 மற்றும் 4878/1, ஹளேகோட்டா கிராமம், பீர்ஜபள்ளி சூளகிரி, ஓசூர் தாலூகா, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு – 635 109.	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், சூளகிரி சார் பதிவு மாவட்டம், ஓசூர் தாலூகா, ஹளேகோட்டா என்கிற பதக்கோட்டா கிராமத்தில் சர்வே எண்.481/Cயில் உள்ள புன்செய் எக்டர் 1.66.0 அல்லது ஏக்கர் 4.1 சென்ட், தீர்வை ரூ.2.32, இதிலடங்கிய 90 சென்ட் நிலத்தில் உள்ள அசையாச் சொத்து.. அமைவிட ஒருங்கிணைப்புகள் : 12.636419, 77.912616 BAANKNET சொத்து ID: BARBHSRBANSHREERAM : அறியவந்த வில்லங்கம் : Nil	அ. HSR லேஅவுட் ஆ. 29590600003502 29590600003248 29590500000012 இ. ரூ.8,87,445.40 ரூ.30,26,865.33 ரூ.16,93,802.19 மொத்தம் : 08.03.2026 தேதி அன்று ரூ.56,08,112.91 மற்றும் ஒப்பந்தப்படியான பின்வட்டி, தொகையை செலுத்தும் நாள்வரையான செலவுகள் மற்றும் கட்டணங்கள் சேர்த்து.	15.04.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	அ. ரூ.94,50,000.00 ஆ. ரூ.9,45,000.00 இ. ரூ.1,00,000.00 ஈ. அடையாள சுவாதீனம்	16.03.2026க்குப் பின்னர்

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction.htm** மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **Baanknet.com** இணையதளங்களின் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை – **போன் : 080–25011710** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 10.03.2026
இடம் : பெங்களூர்

ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பேங்க் ஆஃப் பரோடா

Canara Bank

ஒசூர் SME கிளை –
தர்மபுரி மண்டலம்
Ph : 9489043626

தலைமை அலுவலகம் : பெங்களூர்

கேட்பு அறிவிப்பு [SECTION 13(2)]

கடனீட்டு சொத்துக்களைப் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்க சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழ், வங்கியில் பெற்ற **M/s. தரணி இண்டஸ்டீரீஸ் (கடன்தாரர்)**, (உரிமையாளர் திரு.K.மகேந்திரன்) எண்.41/1, SIDCO இண்டஸ்டிரியல் எஸ்டேட் 4வது பேஸ், ஒசூர் - 635126. **திரு.K.மகேந்திரன் (உரிமையாளர்) முகவரி 1 :** எண்.212D, இந்திரா நகர், பெட்ரபள்ளி, சிப்காட், ஒசூர் - 635126. **முகவரி 2 : திரு.K.மகேந்திரன் (உரிமையாளர்)** த/பெ.காசி, 3-43, தம்மகார வட்டம், புல்லனேரி - 635651 திருப்பத்தூர் தாலுக்கா மற்றும் மாவட்டம் **திரு.N.குமரேசன் (ஜாமீன்தாரர்) முகவரி 1 :** த/பெ.நடேசகவுண்டர், தின்னபட்டி கிராமம், மூக்கனூர் அஞ்சல், தர்மபுரி தாலுக்கா மற்றும் மாவட்டம். **முகவரி 2 : திரு.N.குமரேசன் (ஜாமீன்தாரர்)** த/பெ.நடேசகவுண்டர், கதவு எண்.1/273-D5, கிராப்ஸ் கார்டன், மூக்கண்டபள்ளி, ஒசூர் -635126 கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோருக்கு **13-02-2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு பதிவுத் தபால் மூலம் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட தபால் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துள்ளது. எனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை பெற்றுக் கொள்ளாமல் நீங்கள் தவிர்த்துள்ளதாக நம்புவதற்கு இடமிருக்கிறது. அதனால் கேட்பு அறிவிப்பு இந்த தினசரி செய்தித்தாள் மூலமாக வெளியிடப்படுகிறது. நீங்கள் **MSME TERM LOAN** கடன் பெற்றுக் கொண்டு அதற்கு அடமானமாக உங்கள் சொத்துரிமை ஆவணங்களை வங்கியில் ஒப்படைப்பு செய்து உள்ளீர்கள். கடன் தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்தாததால், மேலும் **கனரா வங்கி, ஒசூர் SME கிளையில் 11-02-2026** அன்று கடன் நிலுவைத் தொகை **ரூ.7,49,326.18 (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து மூந்நூற்று இருபத்து ஆறு மற்றும் பதினெட்டு பைசா மட்டும்)** மற்றும் பின் தொடர்ந்த வட்டி மற்றும் இதர செலவுகள் நீங்கள் செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகை அதன் பின் தொடர் வட்டி முதலியவைகளை திரும்ப செலுத்த, உத்திரவாதத்திற்காக நீங்கள் **கனரா வங்கி, ஒசூர் SME கிளையில்** அடமானமாக கீழ்க்கண்ட சொத்துக்களை பிணையமாகக் கொடுத்திருக்கிறீர்கள்.

சொத்துக்கள் விபரம்

இச்சொத்து **திரு. N.குமரேசன்** பெயரில் உள்ளது.

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி ஜாயிண்ட் 1 துணை பதிவு மாவட்டம், தர்மபுரி தாலுக்கா, மூக்கனூர் கிராமம், 1.சர்வே எண்.457/1K, வறண்ட பரப்பளவு ஹெக்டேர் 0.26.5 இதில் ஏக்கர் 0.19 செண்ட் நிலம். 2.சர்வே எண். 457/1F, வறண்ட பரப்பளவு ஹெக்டேர் 0.27.0 இதில் ஏக்கர் 0.57 செண்ட் நிலம். **எல்லைகள்** பின்வருமாறு : சர்வே எண்.458–ல் உள்ள திரு.மகாலிங்கம் நிலத்திற்கு **கிழக்கு,** சர்வே எண்.457/2 ரோடு மற்றும் திரு.மகாலிங்கம் நிலத்திற்கு **மேற்கு,** சர்வே எண்.471/1–ல் உள்ள திரு.சின்ன பூசாரி நிலத்திற்கு **வடக்கு,** சர்வே எண்.457/1A-ல் உள்ள திரு.தங்கவேல் நிலத்திற்கு **தெற்கு.** இதற்கிடையே சர்வே எண்.457/1K-ல் உள்ள ஏக்கர் 0.19 செண்ட் நிலம், 457/1K-ல் உள்ள ஏக்கர் 0.57 செண்ட் நிலம், மொத்தப்பரப்பளவு ஏக்கர் 0.76 செண்ட் நிலம், இச்சொத்தானது தர்மபுரி யூனியன் மூக்கனூர் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

எனவே கடன் பெற்றவராகிய / உத்திரவாதமளித்தவராகிய நீங்கள் இந்தக் கடன் நிலுவைத் தொகை, தொடர்ந்த வட்டி, இதர செலவுத் தொகைகள் மற்றும் இந்த கேட்பு அறிவிப்புக்கான செலவு போன்றவற்றை மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் சொத்து ஆதாரங்களின் பேரில் வங்கி பெற்றுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடனீட்டுச் சொத்துக்களை பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(4)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் உரிமையை பிரயோகிக்க வங்கிக்கு உரிமை உண்டு. எனவே இந்த நோட்டீஸ் வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த தவறினால், பிணையத்தை அமல்படுத்த வேண்டியிருக்கும் என பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 3(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட சட்டப் பிரிவு 13(13) ன் கீழ் நீங்கள் மேற்படி சொத்தை வங்கியின் ஒப்புதலின்றி எந்தவித சொத்துரிமை மாற்றமும் செய்யக் கூடாது.

தேதி : 13-02-2026
இடம் : ஒசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

யூனியன் பேங்க் ஆப் இந்தியா Union Bank of India
A Government of India Undertaking

தர்மபுரி ஆட்சியர் அலுவலகம் (27251) : ஆட்சியர் அலுவலகம் எதிரில், பேருந்து நிலையம் அருகில், தர்மபுரி – 636 705
போன் : 8928525245
இ–மெயில் : ubin0827258@unionbankofindia.bank.in

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு பிற்சேர்க்கை -IX

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான 15 நாள் பின்னறு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, யூனியன் பேங்க் ஆப் இந்தியாவின் (பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது (கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி), கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள விபரப்படியாகும்.

கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் : கடன்தாரர்கள் : 1. திருமதி. கோகிலா கோவிந்தசாமி, க/பெ கோவிந்தசாமி, மரவடி, 3/10 L, 5வது வீதி, பாரதிபுரம், தர்மபுரி, தமிழ்நாடு – 636 705. **2. திரு. G.பாலசுப்ரமணி,** த/பெ. கோவிந்தசாமி, 3/10L, பாரதிபுரம், கலெக்டரேட், லக்கியம்பட்டி, தர்மபுரி–636 705. **சார்–கடன்தாரர் : திரு. V கோவிந்தசாமி,** 3/10L, பாரதிபுரம், கலெக்டரேட், தர்மபுரி, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு – 636 705.

நிலுவைத் தொகை : **ரூ.21,97,440.00** (ரூபாய் இருபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து நானூற்று நாற்பது மட்டும்) **03.03.2026** தேதி வரை, மற்றும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன்.

சொத்து விபரம் : நிலம் மற்றும் கட்டிடம் அமைந்த, தர்மபுரி மாவட்டம், தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி இணை 1 சார் பதிவு மாவட்டம், தர்மபுரி தாலூகா, பாரதிபுரம், விருப்பாட்சிபுரம் கிராமம், சர்வே எண்.81/3B2, பழைய கதவு எண்.10L, புதிய கதவு எண்.3–10L, இதிலமைந்த ஏக்கர் 0.53 செண்ட் புஞ்சை நிலம் தீர்வை ரூ.0.23, இதில் மனை எண்.17 க்குரிய எல்லைகள் விபரம் : திரு. K.K.முருகேசன் நிலத்துக்குத் தெற்கு, திரு. G.நடராஜன் நிலத்துக்கு மேற்கு, பாரதிபுரம் கிராம எல்லைக்கு வடக்கு, 22 அடி அகல தென்வடல் ரோடுக்குக் கிழக்கு. அளவுகள் : கிழமேல் 60 அடி, தென்வடல் 35 அடி, மொத்தம் 2100 சதுர அடி அல்லது 4½ செண்ட் நிலம், ஏக்கர் 0.06 நிலம், தார்சு வீட்டுடன், பொது வழித்தடம் மற்றும் அனைத்து வசதிகளில் உரிமைகளுடன். இச்சொத்து தர்மபுரி நகராட்சி எல்லைக்குள் உள்ளது. டவுன் சர்வே எண்.12, டவுன் சர்வே வார்டு சேர் கீழ், பிளாக் 49 ல் உள்ள இச்சொத்து திருமதி. G.கோகிலாவிற்குச் சொந்தமாக, வில்லங்கம் ஏதுமற்று உள்ளது.

குறைந்தபட்ச விலை : ரூ.65,31,000/– முன்வைப்புத் தொகை : ரூ.6,53,100/– குறைந்தபட்ச ஏல உயர்வு : ரூ.50,000/–

வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க (ஏதேனுமிருப்பின்) விபரம் : இல்லை. எவ்வாறாயிருப்பினும் ஏலதாரர்கள் தங்களது சொந்த விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

கணக்கு எண்.: 272511980050000, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, தர்மபுரி கிளை, IFSC கோடு : UBIN0827258 கணக்குப் பெயர் : Inward RTGS.

சுவாதீன வகை : ஆக்கபூர்வ (Constructive) சுவாதீனம். விற்பனை அறிவிப்பு தேதி : 11.03.2026

முன்வைப்புத் தொகை (EMD) சமர்ப்பிக்க கடைசித் தேதி :
ஏல நேரம் முடிவடையும் முன்பாக
ஏலத் தேதி / நேரம் : 27.03.2026 (வெள்ளிக்கிழமை)
நண்பகல் 12.00 மணி முதல் மாலை 5.00 வரை, 10 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புடன்.

குறிப்பு : 10 சதவீத முன்வைப்புத் தொகையை **https://baanknet.com** இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். மேலும், விற்பனை விலையின் மீதித் தொகையை விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு எண் வழியாக செலுத்த வேண்டும்.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு கீழே கண்டுள்ள சம்பந்தப்பட்ட கணக்கிற்கான வங்கியின் இணையதளத்தில் அல்லது இ–ஏலத்தின் முகவரின் இணையதளத்தில் கண்டுள்ள லிங்க்–கில் தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரங்கள் (மின்னணு ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பரப்பு மற்றும் அளவுகள் போன்றவை) கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நன்கு அறிந்தவரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஏதேனும் பிழை, தவறான தகவல் மற்றும் விடுபடுதலுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார். அடையாள சுவாதீனப் பரப்பு மற்றும் அளவுகள் மாறுபடலாம்.

https://www.unionbankofindia.bank.in/auction-property/viewauction-property.aspx	https://baanknet.com

URL சொத்து விவரங்களை தெரிந்து கொள்ள வலைதளம் **https://www.ibapi.in/sale_info_home.aspx** மற்றும் வலைதளம் **https://www.unionbankofindia.co.in/english/TendelViewAllAuction.aspx** - ல் உட்புகவும். ஏலதாரர் பதிவு, லாகின் செய்ய மற்றும் ஏல விதிகளை தெரிந்து கொள்ள கீழ் குறிப்பிட்ட வலைதளத்துக்கு வருகை தரவும் **https://baanknet.com** மற்றும் **"Buyer Guide for Login and Registration"** –ஐ கிளிக் செய்யவும்.

இடம் : தர்மபுரி
தேதி : 11.03.2026

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
யூனியன் பேங்க் ஆப் இந்தியா